# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | இஸ்லாம் | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி-I

**1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. தௌஹீதுக்கு எதிரான சொல் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. இலாஹ் 2. ஈமான் 3.குப்ர் 4.ஷிர்க்
2. ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்த ஹிஜ்ரி ஆண்டு,
   1. ஹிஜ்ரி-5 2. ஹிஜ்ரி-3 3.ஹிஜ்ரி-8 4..ஹிஜ்ரி-6
3. அமீருல் மு∴மினீன் என அழைக்கப்பட்ட கலீபா,
   1. உமர்(ரழி) 2. உஸ்மான்(ரழி) 3.அலி(ரழி) 4.அபூபக்கர்(ரழி)
4. மறதிக்காக செய்யப்படும் சஜ்தா எவ்வாறு அழைக்கப்படும்?
   1. சஜ்தா திலாவத் 2.சஜ்தா ஷுக்ர் 3.சஜ்தா சஹ்வு 4.சஜ்தா முராத்
5. அல்-குர்ஆன் தொழுகையோடு வலியுறுத்திக் கூறியுள்ள கடமை
   1. தொழுகை 2. ஸக்காத் 3. நோன்பு 4. ஹஜ்
6. மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள இடம்,
   1. மக்கா 2. மதீனா 3. ஜெருசலம் 4. தாயிப்
7. நபியவர்களின் மி∴றாஜ் நிகழ்வு இடம் பெற்ற நுபுவ்வத் ஆண்டு
   1. நுபுவ்வத் -2 2. நுபுவ்வத்-12 3. நுபுவ்வத்-10 4. நுபுவ்வத்-5
8. ஹிதீஸ் துறையில் இஸ்னாத் எனப்படுவது,
   1. அறிவிப்பாளர்களின் எண்ணிக்கை 2. அறிவிப்பாளர் தொடர்வரிசை
   3. ஹதீஸ்துறை அறிஞர்கள் 4. நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்கள்
9. நபியவர்களின் மனைவியரில் பனூகுரைழா கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்லாத்தை ஏற்ற யூதப் பெண்மணி
   1. ஜீவைரியா(ரழி) 2. ஹப்ஸா(ரழி) 3. சவ்தா(ரழி) 4. சபிய்யா(ரழி)
10. இஸ்மாயீல் (அலை) அவர்களிடம் அரபு மொழியைக் கற்றுக்கொண்ட கோத்திரத்தினர்
    1. பனூ குரைழா 2. ஜுரஹும் கோத்திரம் ம் கோத்திரம்
    3. பனூ தமீம் கோத்திரம் 4. பனூஹாரிதா கோத்திரம்
11. திருமண உறவு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள முறையைக் குறிக்கும் சொல்
    1. அஜ்னபி 2. மஹ்ரமி 3. அஜமி 4. ஹகமி
12. நபியவர்கள் மி∴றாஜ் சென்றபோது ஏழாவது வானத்தில் இருந்த நபி
    1.ஆதம் (அலை) 2.ஈஸா(அலை) 3.இப்றாஹீம் (அலை) 4.இத்ரிஸ் (அலை)
13. ஸலாத்துல் குஸூபைன் என்பது
    1.மழை வேண்டித்தொழும் தொழுகை 2.பெருநாள் தொழுகை
    3.நன்மை தேடித்தொழும் தொழுகை 4.கிரகணத் தொழுகை



kalvi.lk

14. அல்மாவூன் என்பது,
1. உதவி 2. குறை கூறல் 3. அற்பப் பொருள் 4. தொழாதவர்கள்

15. நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தினர் மூன்று ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்ட இடம்,
1. மதீனா 2. கூபா 3. ஷிஃபு அபீதாலிப் 4. ஹிறா

16. மதீனாவின் பழைய பெயர்,
1. பக்கா 2. யத்ரிப் 3. உம்முல்குரா 4. தௌர்

17. தளபதி ஹஜ்ஜாஜ் பின் யூஸுபின் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டவர்,
1. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி) 2. அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரழி)
3. அப்துல்லாஹ் இப்னு ஸுபைர்(ரழி) 4. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

18. ஸித்தீக் என்பதன் பொருள்,
1.பரிகாசம் 2.பொய் 3.உண்மைப்படுத்தியவர் 4. நிராகரித்தவர்

19. தவர்ருக் என்பது,
1. முதல் அத்தஹிய்யாத் இருப்பு 2. கடைசி அத்தஹிய்யாத் இருப்பு
3. எழுந்து நிற்றல் 4. குனிந்து நிற்றல்

20. காத்தமுந் நபிய்யீன் என்பது,
1. நபிமார்களில் முதன்மையானவர் 2. அகிலாத்தாருக்கு அருட்கொடை
3. மனிதர்களின் தந்தை 4. நபிமார்களில் இறுதியானவர்.

(20× 1= 20புள்ளிகள்)

## பகுதி-II

**02. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான நியாயங்கள் 2 தருக.
2. தன் சமூகத்தால் கொலை செய்யப்பட்ட இரு நபிமார்களின் பெயர்களையும் தருக.
3. ஹதீஸ்கள் புனைந்துரைக்கப்பட்டமைக்கான இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.
4. அல் இஸ்ரா அல்மிஃறாஜ் என்றால் என்ன.
5. நபியவர்களின் பிரச்சாரப்பணியை எதிர்த்த குறைக்காபீர்கள் இருவரைக் குறிப்பிடுக.
6. ஆமுல் ஹுஸ்ன் என்றால் என்ன? அது ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றது.
7. முஸ்லீம்களுக்கும் காபிர்களுக்கும் இடையே நடந்த இரு போர்களைக் குறிப்பிடுக.
8. தொழுகையினால் கிடைக்கும் மறுமைப் பயன்கள் 2 தருக.
9. ஹதீஸ்களின் முக்கிய இரு பிரிவுகளும் எவை?
10. இப்றாஹீம் (அலை)அவர்களுக்கு வழங்கப்பட்ட இரு சிறப்புப் பெயர்களைத் தருக.

(10× 2= 20புள்ளிகள்)

**03. பின்வரும் அரபுச் சொற்களின் பொருளைத் தருக.**

1. இலாஹ்
2. ஸவ்ம்
3. அர்ரஹீம்
4. திலாவத்
5. யதீம்
6. ஸுஜூத்
7. ஹம்து
8. ஹலால்
9. உலுல் அஸ்ம்
10. ஷரீஆ

(10×1 =10 புள்ளிகள்)



kalvi.lk

**04. ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01. I. ஹதீஸ் என்றால் என்ன?

II. சஹீஹைன் என்பதன் மூலம் கருதப்படுபவை யாவை?

III. அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தாவில் உள்ளடங்கும் ஹதிஸ் நூற்களைக் குறிப்பிடுக.

(2+ 3+ 5 =10 புள்ளிகள்)

02. I. இப்றாஹீம் (அலை) அவர்கள் நபிமார்களின் தந்தை எனப் போற்றப்படக் காரணம் யாது?

II. இப்றாஹீம் (அலை)அவர்கள் வாழ்ந்த மூன்று நாடுகளைக் குறிப்பிடுக.

III. இப்றாஹீம் (அலை) அவர்களின் குடும்பத்துடன் தொடர்புடைய ஹஜ் செயற்பாடுகள் ஐந்தைக் குறிப்பிடுக. (2+ 3+ 5 =10புள்ளிகள்)

03. I. பொதுச் சொத்துக்கள் என்றால் என்ன?

II. திருமண உறவு மூலமான தற்காலிக மஹ்ரம்கள் யாவர்?

III. எமது முன்னோர்களான ஸகாபாக்கள் பொதுச் சொத்துக்கள் விடயத்தில் எவ்வாறெல்லாம் பேணுதலாக இருந்தார்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை எழுதுக.

(2+ 3+ 5 =10 புள்ளிகள்)

04. I. நபி ஸல் அவர்களை த.ஃ.வாவின் பக்கம் தூண்டிய அல் - குர்ஆன் வசனம் எது?

II. நபி ஸல் அவர்களின் த.ஃ.வாவை குறைஷியர் எதிர்த்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக.

III. அகபா உடன்படிக்கை என்றால் என்ன விளக்குக.

(2+ 3+ 5 =10 புள்ளிகள்)

05. I. அல் இஸ்ராவில்நபி(ஸல்) அவர்கள் பெற்ற அனுபவங்கள் சிலவற்றைத் தருக?

II. முஸ்லீம்கள் ஹிஜ்ரத் சென்ற நாடுகள் எவை?

III. அல் குர்ஆனுக்கும் ஹதீஸ் குத்ஸீக்கும் இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக. (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

06. I. அனாதைகளைப் பராமரிப்பவர் தொடர்பாக நபியவர்கள் கூறிய ஹதிஸ் ஒன்றினைத் தருக.

II. மறுமையில் விசாரணையின் போது கொண்டு வரப்படும் சாட்சியங்கள் எவை.

III. அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் தடுத்த ஏழு பெரும் பாவங்களுள் ஐந்தினைத் தருக.

(2+ 3+ 5 =10 புள்ளிகள்)

07. . I. நபி(ஸல்) அவர்களின் நற்குணம் பற்றி அல்குர்ஆன் எவ்வாறு வர்ணிக்கின்றது?

II. ஆலிம்களுக்காகப் பிரார்த்திப்பவை எவை?

III. ரம்ழான் மாதத்தின் பயன்கள் 5 தருக.

(2+ 3+ 5 =10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457